NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 16 April 2019

# அறநிறுவனங்களுக்கு வழிகாட்ட புதிய நூல் தொகுப்புகள் அறிமுகம்

சமூகத்தின் மாறிவரும் தேவைகளுக்கு நன்கொடை அமைப்புகள் தங்களை மாற்றியமைத்துக் கொள்ள இரு வழிகாட்டி நூல் தொகுப்புகள் வெளியிடப்பட்டு உள்ளன.

அறநிறுவனங்களின் ஆற்றலை மேம்படுத்த உதவும் இந்த நூல் தொகுப்புகளில் கல்வியாளர்கள், கணக்காய்வாளர்கள், லாப நோக்கமற்ற அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்களின் உள்நோக்குப் பார்வைகள் இடம்பெறுகின்றன.

காலத்திற்கு ஏற்புடையதாக இருக்க சமூகத்தின் மாறிவரும் தேவைகளுக்கு அறநிறுவனங்கள் தங்களை மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம் என்று அறநிறுவன மன்றத் தலைவர் ஜெரார்ட் ஈ வலியுறுத்தினார்.

"சமூகத்தின் நீண்டகால தேவைகள் குறித்து அறநிறுவனங்கள் சிந்தித்துப் பார்க்க இவ்விரு வழிகாட்டி நூல் தொகுப்புகள் வளங்களாக அமையும்.

எதிர்காலச் சவால்களை நன்கு சமாளிக்க சமூக சேவை துறை எவ்வாறு தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளலாம் என்பது குறித்து முதல் தொகுப்பு நூல்கள் விளக்கும்.

தலைசிறந்த கணக்காய்வு, நிதி நடைமுறைகள் குறித்து இரண்டாவது தொகுப்பு நூல்கள் எடுத்துரைக்கும்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சமூகப் பணி துறையைச் சேர்ந்த ஆசிய சமூக மேம்பாட்டு மையம் நேற்று நடத்திய இந்த நூல் தொகுப்பு வெளியீட்டு நிகழ்ச்சியில் சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சர் டெஸ்மண்ட் லீ சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

"எதிர்காலத்திற்கு சமூக சேவைத் துறை தன்னை உருமாற்றிக்கொள் வதன் மூலம், சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்திசெய்ய அது அடித்தளம் போடுகிறது," என்றார் அவர்.

சமூக சேவைத் துறை எதிர்நோக்கும் சவால்களை இந்த நூல் தொகுப்புகள் ஆவணப்படுத்தியுள்ளதாக ஆசிய சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவர் எஸ்.வாசு கூறினார்.

சிறிய, பெரிய அளவிலான அறநிறுவனங்களின் ஆற்றலை மேம்படுத்த இந்த நூல் வளங்கள் கைகொடுக்கும் என்று ஸ்ரீ நாராயண மிஷன் முதியோர் இல்லத்தின் தலைமை நிர்வாகி எஸ்.தேவேந்திரன் தெரிவித்து உள்ளார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.